வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 28.10.2024 திங்கட்கிழமை | இதழ் : 301 | பக்கங்கள் : 12

# அநுரகுமாரவின் அரசாங்கம் 3 வாரங்கள்கூட நீடிக்காது!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 28

அநுரகுமாரவின் அரசாங்கம் மூன்று மாதங்கள் நீடிக்கும் என்று மக்கள் கூறுகின்றனர். நான் கூறவில்லை. ஆனால், அவரின் வேட்பாளர் பட்டியலைப் பார்த்தால் மூன்று மாதங்களல்ல, மூன்று வாரங்கள்கூட நீடிக்காது - என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

## நான் அநுரவை சந்தித்ததால் பலரும் அச்சத்தில் உள்ளனர்!

### சொல்கிறார் டக்ளஸ்

- குமார கோகுலன் -

வவுனியா, ஒக். 28

ஜனாதிபதி அநுரவுடனான எனது சந்திப்பு சில வேளை பலருக்கு புளியை கரைத்திருக்கலாம் - இவ்வாறு கூறியிருக்கிறார் ஈ. பி. டி. பியின் டக்ளஸ் தேவானந்தா.

அத்துடன், ஜனாதிபதி அநுரவின் அணுகு முறை யிலும் செயல்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனை பொறுத்திருந்து 11

## “அநுரவுடன் படம் எடுப்பதால் அமைச்சராகி விட முடியாது!”

முல்லைத்தீவு, ஒக். 28

தமிழ்த் தலைவர்கள் அநுரவுடன் ஒளிப்படம் எடுப்பதால் அமைச்சர்கள் ஆகிவிட முடியாது. தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெல்பவர்களே அமைச்சர்களாக முடியும்”, இவ்வாறு கூறியுள்ளார் அந்தக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் எம். பியுமான பிமல் ரத்நாயக்க.

புதுக்குடியிருப்பில் நடந்த கூட்டத்தில் பேசிய அவர், தேசிய மக்கள் சக்தி வடக்கு 11

## டக்ளஸ் தேவானந்தாவால்தான் எங்கள் கடல் வளம் நாசமானது!

### வடமராட்சி வடக்கு சமாசம் சாடல்

- பா.பிரசன்னா -

வடமராட்சி, ஒக். 28

டக்ளஸ் தேவானந்தாவால்தான் எங்களின் கடல் வளம் நாசமாகிப் போயுள்ளது என்று வடமராட்சி வடக்கு சமாசத்தின் உபதலைவர் நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கேள்வி 11



## யாழ். வருகிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஒக். 28

பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி பிரதமர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரை கூட்டத்தில் பங்கேற்கவே அவர் வடக்கு வருகிறார். (ஐ)

## ஜனாதிபதி அநுரவும் இராணுவம், போரால் பாதிக்கப்பட்டவர்தான்!

### முல்லைத்தீவில் பிமல் இப்படி பிரசாரம்

முல்லைத்தீவு, ஒக். 28

ஜனாதிபதி அநுரகுமாரவின் வீடும் இராணுவத்தால் 1979ஆம் ஆண்டு தாக்கப்பட்டது. போரால் அநுரவின் ஒரேயோர் அண்ணா ரயர் போட்டு கொளுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் - இவ்வாறு போரால் பேரழிவை சந்தித்த முல்லைத்தீவில் பிரசாரம் செய்த தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் முன்னாள் எம்.பியுமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அநுரகுமார திஸநாயக்க ஏழ்மையான குடும்பத்தில் 11

## அநுர ஜனவரியில் இந்தியா பயணம் மோடி பெப்ரவரியில் இங்கு வருவார்!

கொழும்பு, ஒக். 28

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான உயர்மட்ட குழு ஜனவரி மாதம் டில்லி செல்கின்றது. அங்கு செல்லும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுப்பார்.

நாட்டின் சுதந்திர தினத்தன்று இந்தியப் பிரதமரின் இலங்கை வருகை அமையலாம் என்று கூறப்படுகின்றது.

பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் 11

## தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைக்க முயற்சிப்பேன்!

### தமிழ் அரசு சிறீதரன் சொல்கிறார்

கிளிநொச்சி, ஒக். 28

“ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியல் போரில், ஏகோபித்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன்” - என இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் போட்டியிடும் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செல்வா நகரில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11




## நாடு முழுவதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

சுற்றுலா பயணத் தளங்கள் மற்றும் நாட்டின் பிரதான பகுதிகளில் குண்டுத் தாக்குதல்கள் உட் பட எந்த வோர் ஆபத்தான அச்சுறுத்தலும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. 11

## அறுகம் குடாவில் குண்டுகள் வதந்தி பரப்பிய நபர் கைது!

பொத்துவில், ஒக். 28

அறுகம் குடாவில் மூன்று இடங்களில் வெடிகுண்டு அச்சுறுத்தல் உள்ளது என்று கூறி சுற்றுலா பயணிகளிடம் வதந்தி பரப்பிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து அறுகம் குடாவுக்கு சுற்றுலா 11

## இனப் பிரச்னைக்கு தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து தீர்வு!

### மனோ கணேசன் சொல்கிறார்

கொழும்பு, ஒக். 28

“ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை பெற்றுத் தருவோம். அதற்கான ஆணையைத் தமிழ் மக்கள், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் தமிழ்த் தேசியக் 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தேர்தலில் போட்டியிடுவதும், வெற்றிபெற்ற பின்னர் புலம்பெயர் கோடீஸ்வரரின் கட்சியில் சேர்ந்து அவர்களோடு பணியாற்றுவதற்காக - அவர்களின் நிதி வசதிகளுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுபவர்கள் பற்றி கடந்த வெள்ளிக்கிழமை எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தப் பத்தியில், அவ்வாறு கட்சி தாவினால் போட்டியிட்டு வெற்றி பெறுகின்ற கட்சி இவர்கள்மீது கட்சித் தாவலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், அவர்கள் பதவியை இழக்கவேண்டி வரும் என்றும் இது "நொண்டிக் குதிரை மீது பணம் செலுத்துவது போன்றது" எனவும் எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, நண்பர் ஒருவர் சிறிய குறிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார்.

"நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், கட்சி தாவுகின்றவரே கட்சியின் தலைவராகவும் இருந்துவிட்டால், அவர்மீது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகின்றீர்களா?"

இதுதான் அந்த நண்பர் அனுப்பிய குறிப்பிலிருந்த கேள்வி.

நண்பரின் கேள்வி நியாயமானதுதான். ஒரு கட்சியே ஒட்டுமொத்தமாக அவ்வாறு செல்வதற்கு முடிவெடுத்து பணியாற்றுகிறது என்றும், இன்னும் சிலர் வெற்றி பெறுவார்களா என்பது தெரியவில்லை. அப்படி வெற்றி பெற்றாலும் அவர்கள் அவ்வாறு கட்சி தாவினாலும் அவர்களின் தற்போதைய கட்சி நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் இல்லை எனவும் ஒரு கொசுறுச் செய்தி தெரிவித்தது.

இனி இன்று எழுத வந்த விடயத்துக்கு வருவோம்.

காலை அலுவலகத்துக்கு வந்துகொண்டிருந்தபோது வழியில் ஒரு வீட்டுச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகளை அந்த வீட்டுக்காரர் மிகுந்த சிரமப்பட்டு அகற்றிக் கொண்டிருந்தார்.

சைக்கிளை நிறுத்தி, அவரிடம் கேட்டேன், "தேர்தல் முடியும்வரை இதனை இப்படியே விட்டுவிட்டீர்கள் என்றால் நல்லது அல்லவா? இல்லையெனில் இன்று நீங்கள் அகற்றிய பின்னர் நாளை இரவு இன்னுமொரு கட்சிக்காரர் வந்து ஒட்டுவார், நீங்கள் பிறகு நாளையும் அகற்றவேண்டுமே?".

அவருக்கு வந்த கோபத்தில், ஏதோ நானேதான் ஒட்டியதுபோல என்னை ஏற இறங்கப்பார்த்துவிட்டு சொன்னார், "பாரும் எவ்வளவு அழகாக பெயின்ற் அடித்து மதிலை வைச்சிருக்கிறன். இந்த கோதாரியில போவாருக்கு நோட்டீஸை ஒட்டேக்க ஒரு மனச்சாட்சி வேண்டாமா?"

அவருடைய கோபம் நியாயமானதுதான். அது அவர் வீட்டுச் சுவரில் மட்டுமல்ல, இப்படி நகரம் முழுவதும் தேர்தல் வேட்பாளர்கள் அசிங்கப்படுத்தி வைத்திருப்பது உண்மைதான். ஆனாலும் எனது கேள்விக்கு அவரிடமிருந்து இன்னமும் பதில் வராததால் திரும்பக் கேட்டேன், "நீங்கள் இப்ப அகற்றினாலும் இதே ஆட்கள் இல்லாவிட்டாலும் வேறு ஆட்கள் வந்து ஒட்டுவார்களே" என்று.

"உண்மைதான் தம்பி, ஆனால், இதை அகற்றாவிட்டால் தொடர்ந்து எல்லோரும் ஒட்டுவார்களே. இப்படி அகற்றிவிட்டால் கொஞ்சம் எண்டாலும் மனச்சாட்சி உள்ளவர்களாவது ஒட்டமாட்டர்கள் அல்லவா?. அதைவிட முக்கியம், இதை அகற்றாமல் விட்டால் மற்றையவர்களும் வந்து சுவர் முழுவதுமல்லவா ஒட்டிவிடுவார்கள்."

அந்தச் சுவரொட்டிக்கு சொந்தக்காரர்களின் கட்சியின் ஆதரவாளராக அவர் இருந்தால், நிச்சயம் இந்தத் தேர்தலில் அவர்களுக்கு வாக்குப் போடுவாரோ தெரியவில்லை.

இப்போதெல்லாம், சுவரொட்டிகளை அச்சிடுகின்ற செலவிலும் பார்க்க அதனை ஒட்டுவதற்குத்தான் வேட்பாளர்கள் அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. அதைவிட சுவரொட்டிகளை ஒட்டிக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் பலர் வந்துவிட்டார்கள். இவர்களிடமே வேட்பாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு கொடுப்பதால், அவர்கள் எங்காவது ஒட்டினால் தமது வேலை முடிந்தது என்று நினைக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்படுவது அந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் மட்டுமல்ல, வேட்பாளர்களும்தான்.

இது ஒரு தீராத பிரச்னையாக ஒவ்வொரு தேர்தலிலும்தான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மதில்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதென்றால், அந்த மதில்களின் சொந்தக்காரர்களின் அனுமதியுடன்தான் ஒட்ட வேண்டும், இல்லையேல் மதில் சொந்தக்காரர்கள் முறையிட்டால் அதற்கு வேட்பாளர்களே பொறுப்பேற்க வேண்டும் என்று தேர்தல் திணைக்களமோ அல்லது பொலிஸாரோ ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினால் இந்த மாதிரியான நெருக்கடிகள் ஏற்படாது.

தமிழகத்தில் தங்கள் மதில்களில் அரசியல் விளம்பரங்களை எழுதுவதற்கு, மதில் உரிமையாளர்களே கட்டணம் வாங்கிக்கொண்டு அனுமதி வழங்குவார்கள். அதுபோல மதில் சொந்தக்காரர்கள் விரும்பினால் மாத்திரமே சுவரொட்டிகளை ஒட்டலாம் என்பதை கட்டாயமாக்க வேண்டும். இல்லையெல் ஒட்டப்படும் சுவரொட்டிக்கு வேட்பாளர்கள் மீதே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் போது தெற்கிலிருந்து ஓர் அரசியல் பிரமுகர் பேசினார். எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் முடிவுகளைப் பற்றி பேசிய அவர், ஆளும், தேசிய மக்கள் சக்தி பதினைந்து ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும் எதிரணிகள் எல்லாம் ஒன்றிணைந்தால் ஆட்சியமைக்கக் கூடியவாறே முடிவுகள் வந்திருக்கின்றன - என்றார். அதுபற்றி அவர் மேலும் விபரிக்க முயன்றபோது, நான் இடைமறித்து சொன்னேன், "இந்த உள்ளூராட்சி தேர்தல் முறையே தவறானதுதானே. அதை வைத்து விமர்சிப்பது தவறு" என்று.

அதற்கு அவர் சொன்னார், அதுவல்ல, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அங்கு பெற்ற வாக்குகள், ஐம்பத்தி ஆறு வீதம். ஆனால் இப்போது பெற்றது நாற்பத்தி இரண்டுதான்.."

இதுபற்றி ஆராய்வது என்றால் இன்று இந்தப் பத்தி போதுமானதல்ல. பிறிதொரு நாளில் பார்ப்போம்.!

- ஊர்க்குருவி.

## யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து பொலிஸாருடன் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லூட்சன் சூரியபண்டாரா தலைமையில் நடைபெற்றது.



இந்தக் கலந்துரையாடலில் போக்குவரத்து பொலிஸார் எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன. அத்துடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## புங்குடுதீவில் நாளை மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

புங்குடுதீவு பிரதேச பாடசாலைகளை மேம்படுத்தல் மற்றும் 2023ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புங்குடுதீவு சிறீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்க கனடா கிளையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயளாளர் இலட்சுமணன் இளங்கோவன், சிறப்பு விருந்தினராக தீவகக் கல்வி வலய கல்வி நிர்வாகம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் யோகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வுள்ளனர்.

## இந்திய மீனவர்கள் 12 பேரும் 8 ஆம் திகதி வரை மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 28

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவின் நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேரை கடற்படையினர் ஒரு படகுடன் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதாகிய இந்திய மீனவர்களை நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் நேற்று மயிலிட்டி மீன்பிடித் துறை முகத்தில் வைத்து கடற் படையினர் கையளித்தனர்.

இந்த நிலையில் மீனவர்கள் 12 பேரையும் பருத்தித்துறை பதில் நீதிவான் பி. குமாரசுவாமி முன்னிலையில் நீரியல்வளத்துறை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் மீனவர்கள் 12 பேரையும் நவம்பர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-01-02)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.10.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## வடக்கு, கிழக்கில் அநுர அலையும் சுமந்திரனும்

இன்று நடைமுறையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் 'தலைவராக' செயல்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் நேற்றைய தினம் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அநுர அலை ஒன்று வீசுவதாகவும் அது ஆபத்தானது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்", என்று கூறியிருக்கிறார்.

"தங்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் அதிகாரத்தை தமிழ் மக்கள் எங்களுக்கே தரவேண்டும். அநுர அலையை அடியோடு அகற்றிவிட வேண்டும். தமிழ் அரசு கட்சியை ஓர் அணியாக - பேரம்பேசும் சக்தியாக பாராளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலமாகவே தமிழ் மக்கள் தங்களது இலக்குகளை அடையமுடியும். அதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது", என்றும் அந்த நேர்காணலில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற பிரவேசம் செய்த சுமந்திரன் பிறகு இரு பாராளுமன்ற தேர்தல்களில் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு இதுவரையில் பதினான்கு வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார்.

இந்தத் தடவை பாராளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளராக இல்லாமல் தமிழ் அரசு கட்சியின் வேட்பாளராகவே அவர் களமிறங்கியிருக்கிறார். இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் பலவாறாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும், அவற்றிடையே சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் ஓர் ஒற்றுமை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

தாங்கள் வெற்றி பெறாவிட்டாலும் பரவாயில்லை, சுமந்திரன் தோல்வியடைய வேண்டும் என்ற ஓர்மத்துடனும் பலர் இருக்கிறார்கள். உண்மையில், இந்தத் தேர்தலில் அவர் முன்னென்றும் இல்லாத வகையிலான சவாலை எதிர்நோக்குகிறார் என்பதில் சந்தேகமில்லை. வெவ்வேறாகப் பிரிந்து தேர்தல் களத்தில் நின்றாலும் மனதளவில் தனக்கு எதிராக ஒற்றுமைப்பட்டு நிற்கும் மற்றைய தமிழ்க் கட்சிகளிடமிருந்து வரக்கூடிய சவாலைப் பற்றி பேசாமல் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே தங்களுக்கு பெரிய சவாலாக இருப்பது போன்று சுமந்திரன் நேர்காணலில் கருத்து தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பது உண்மையே. அதை சுமந்திரன் கூறியிருப்பதைப் போன்று ஓர் 'அநுர அலை' என்று வர்ணிப்பது எந்தளவுக்கு பொருத்தமானது என்பது ஒரு முக்கியமான கேள்வி. தங்களிடம் வாக்குக் கேட்டு வரும் தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களிடம் தமிழ் மக்கள் "நாங்கள் இந்த முறை திசைகாட்டிக்குத்தான் வாக்களிக்கப் போகிறோம்" என்று கூறுவதாக அறியமுடிகிறது.

ஜனாதிபதி அநுரவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருக்கிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது. தெற்கில் மக்கள் காண விரும்பும் மாற்றத்துக்கு ஆதரவாக வடக்கு மக்கள் வாக்களிப்பதே விரும்பத்தக்கது என்ற தொனியில் ஜனாதிபதி தேர்தலின்போது அநுர பேசியதை தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் இனவாதத்தை அவர் தூண்டுவதாக ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியபோது அதை மறுதலித்து, "அநுர இனவாத நோக்கத்துடன் அவ்வாறு கூறவில்லை", என்று அவருக்காக ஓடிச்சென்று முதலில் குரல் கொடுத்தவர் சுமந்திரன். இப்போது அவர் அதே அநுர அலையைத் தடுத்தேயாக வேண்டும் என்று சூளுரைக்கிறார்.

தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தமிழ் அரசியல் கட்சிகளிடம் - அதுவும் குறிப்பாக தனது தமிழ் அரசு கட்சியிடம் இருக்கவேண்டும் என்ற அவரின் அக்கறையே அதற்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், தமிழ்க் கட்சிகள் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து தங்களுக்குள் முட்டிமோதி தமிழ்த் தேசியவாத அரசியலை கேலிக்கூத்தாக்கிக் கொண்டிருப்பதனால் தங்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் படுமோசமாக சிதறுப்படப் போகிறது என்று அஞ்சும் தமிழ் மக்கள், தமிழ் கட்சிகள்மீது கடுமையாக வெறுப்படைந்திருக்கிறார்கள். தங்கள் மத்தியில் மாற்று அரசியல் சக்தி ஒன்று இல்லை என்பதாலேயே அநுர பக்கம் தமிழ் மக்கள் திரும்பிப் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பதை சுமந்திரன் மாத்திரமல்ல, மற்றைய தமிழ் கட்சிகளின் தலைவர்களும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

# சாத்திரம் பார்ப்பதாகக் கூறி தாலிக்கொடி அபகரிப்பு!

மன்னார், ஒக். 28

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவனுடன் சென்ற பெண்ணொருவர் சாத்திரம் பார்ப்பதாக கூறி வீட்டில் இருந்தவர்களை சுய நினைவை இழக்கச் செய்து சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியை அபகரித்துச் சென்றுள்ளார்.

குறித்த வீட்டுக்கு சென்ற பெண், கோவிலுக்கு நிதி சேகரிக்க வந்துள்ளதாக கூறியுள்ளார். இந்த நிலையில் அவர்கள் பணத்தை கொடுக்க குடிக்க நீர் கேட்டுள்ளார்.

இதன் போது அவர்கள் குடிக்க நீர் கொடுத்து உள்ளனர். இதன் போது தான் ஜோதிடம் பார்த்து கூறுவதாக கூறி பலவந்தப்படுத்தி வீட்டில் இருந்த இருவருக்கு சாத்திரம் பார்த்துள்ளார்.

இதன்போது குறித்த இருவருக்கும் சுய நினைவை இழக்கச் செய்யும் வகையில் மருந்து பூசிய நிலையில் இருவரும் சுய நினைவை இழந்த நிலையில் அந்த வீட்டின் பெண் அணிந்திருந்த சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்துக் சென்றுள்ளார்.

அவர்களுக்கு சுய நினைவு திரும்பிய நிலையில் குறித்த தாலிக்கொடி கொள்ளையடிக்கப்பட்டது தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பெண் சிறுவனுடன் குறித்த பகுதியில் வீதியில் சென்ற சி. சி. ரீவி காட்சி வெளியாகியுள்ளது.

(எ)

## முதியவரின் சடலம் மீட்பு

திருநெல்வேலி, ஒக். 28

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பகுதியிலுள்ள வீடு ஒன்றில் துவிச்சக்கர வண்டிக்கு மேலே விழுந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்கப்பட்டது. கேணியடி, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிறிராகுலன் (வயது -79) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், பொதுச் சுகாதார பரிசோதகரும் நேற்றுமுன்தினம் காலை டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்புக்காக குறித்த பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்றனர். அப்போது குறித்த முதியவர் துவிச்சக்கரவண்டி மீது விழுந்த நிலையில் சடலமாக காணப்பட்டார்.

இந்த நிலையில் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. கோப்பாய் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சடலம் மீதான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாகவே மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரிய வந்தது.

(எ-05)

## யாழில் கிணற்றிலிருந்து 11 கைக்குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

பருத்தித்துறை, கொட்டடி பகுதியிலுள்ள காணியொன்றில் நீண்ட காலமாக பாவனையின்றி காணப்படும் கிணற்றை இறைத்து துப்புரவு செய்தபோது அந்தக் கிணற்றிலிருந்து 11 கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் கைக்குண்டுகளை மீட்டுச் சென்றனர்.

(எ)

## வாக்காளர் அட்டை விநியோகம் கிளிநொச்சியிலும் ஆரம்பமானது



கிளிநொச்சி, ஒக். 28


2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் நாடுபூராகவும் ஆரம்பமானது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் 2024ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் பிரகாரம் 100907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை தபால் உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை முதல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விநியோகித்தனர்.

(எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒக்ரோபர் - 28 திங்கட்கிழமை**
குரோதி வருடம் - ஐப்பசி ll
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவாதசி




### மேடம்
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

### இடபம்
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

### மிதுனம்
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பெருமையடைவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

### கடகம்
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

### சிம்மம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். ஊழியர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

### கன்னி
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

### துலாம்
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். புகழ், கௌரவம் கூடும் நாள்.

### விருட்சிகம்
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உங்கள் திறமையைக் கண்டு அதிகாரி வியப்பார்.

### தனுசு
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய பாதை தெரியும் நாள்.

### மகரம்
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். நிதானம் தேவைப்படும்.


### கும்பம்
தன்னம்பிக்கையுடன் செயல்பட தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

### மீனம்
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

# அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடன் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 28

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இம்முறை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சை குழுக்களும் போட்டியிடுவதாகவும், 06 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 396 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் எனவும், ஆதலால் வேட்பாளர்கள் சட்டங்கள் மற்றும் சுற்று நிருபத்துக்கு அமைய ஜனநாயக ரீதியில் பிரசார நடவடிக்கைகளை எதுவிதமான முரண்பாடுகளுமின்றி ஆரோக்கியமாக மேற்கொள்வதனை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 48 வாக்கெண்ணும் நிலையங்களுக்கும், 17 தபால் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் மற்றும் பெறுபேறு தயாரித்து வெளியிடும் நிலையத்துக்கும் வேட்பாளர்களின் முகவர்களை சரியான பொறிமுறையூடாக சட்டத்தின் மூலம் நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட சிறப்பான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொண்டார். இம்முறை மாவட்டச் செயலகத்தில் இயங்கும் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மேலதிகமாக சாவகச்சேரி, சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் தெளிவூட்டல்களை வழங்கினார்.

(எ-05)

# ஞானச்சுடர் 322ஆவது ஆன்மீக மலர் வெளியீடு

வடமராட்சி. ஒக், 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 322 ஆவது ஆன்மீக மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



ஐப்பசி மாத ஞானச்சுடர் இதழான 322 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்,

வெளியீட்டுரையை வில்லிசை மாமணி க. சத்தியதாஸூம் மதிப்பீட்டுரையை ஆசிரிய ஆலோசகரும், சைவப் புலவருமான செ. கந்த சத்தியதாஸனும் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட முதியவர்களுக்கான உடைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(எ-02)

# அக்கராயன் காட்டுக்குள் 10 ஆயிரம் விதைபந்துகள்

## பாடசாலை மாணவர்களால் வீசப்பட்டன

கிளிநொச்சி, ஒக். 28

2024 ஆம் ஆண்டுக்கான விதைபந்து திருவிழாவின் இறுதி மற்றும் பிரதான நிகழ்வாக நேற்று முன்தினம் காலை 8. 30 மணியளவில் அக்கராயனில் ஒதுக்கப்பட்ட காட்டினுள் விதைபந்துகள் வீசப்பட்டன.

ஓராயம் அமைப்பின் அனுசரணையுடன் கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயத்தால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதன்போது விவேகானந்த வித்தியாலய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதைபந்துகள் அக்கராயன் காட்டுக்குள் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் வீசப்பட்டன.

இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. எம். றியாஸ் அகமட், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் சி. லதீஸ்குமார், வன பாதுகாப்பு திணைக்களத்தின் வன விரிவாக்க உத்தியோகத்தர், கிளிநொச்சி மகா வித்தியாலய பிரதி அதிபர் அரவிந்தன், சூழலியலாளரும் இலங்கை வனவிலங்குகள் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் வட மாகாண பிரதிநிதியுமான ம. சசிகரன், ஊடகவியலாளரும் சூழலியலாளருமான மு. தமிழ்ச்செல்வன், கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருவையாறு மகா வித்தியாலயம் மற்றும் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் இணைந்து கொண்டனர்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எல்பிட்டி பிரதே சபை தேர்தல் தேசிய மக்கள் சக்தி வெற்றி!

கொழும்பு, ஒக். 28

**எல்பிட்டி பிரதேச சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது.**

**காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் வாக்களிப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.**

இதில் அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகள், ஒரு சுயேச்சை குழு என்பன போட்டியிட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவை அண்டி தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன.

இதன்படி, தேசிய மக்கள் சக்தி - 17 ஆயிரத்து 295 வாக்குகளை பெற்று 15 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி - 7 ஆயிரத்து 924 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களையும் சிறீலங்கா பொதுஜன பெரமுன - 3 ஆயிரத்து 597 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களையும் பெற்றன.

இதேசமயம், பொதுஜன ஐக்கிய முன்னணி-2 ஆயிரத்து 612 வாக்குகளையும் சுயேச்சை குழு-2 ஆயிரத்து 568 வாக்குகளையும் பெற்று தலா 2 ஆசனங்களையும் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி - ஆயிரத்து 350 வாக்குகளையும் தேசிய மக்கள் கட்சி - 521 வாக்குகளை களையும் பெற்று தலா ஓர் ஆசனத்தை கைப்பற்றின.

(ஐ)

# ரோஹிதவின் பிரிட்டன் இல்லத்தில் சோதனை!

கொழும்பு, ஒக்.

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகமவின் உத்தியோபூர்வ இல்லத்தில் பணியாளர் ஒருவர் துன்புறுத்தப்பட்டார் என்று வெளியான தகவல்கள் குறித்து பிரிட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் சமையல்காரராக பணிபுரியும் ஒருவர் தனது நண்பர் ஊடாக பிரிட்டன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த வீட்டுக்கு சென்ற பொலிஸார் அந்த வீட்டில் யாரோ தற்கொலை செய்யவுள்ளனர் என தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும், சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இராஜதந்திர விடுபாட்டு உரிமை காரணமாக பொலிஸார் அந்த வீட்டுக்குள் செல்லவில்லை என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, முறைப்பாடு செய்த நபர் அவசரகடவுச்சீட்டின் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

(ஐ)

# சமூகவலைத்தளங்கள் மூலம் காதல் வலை விரித்து மோசடி!

## எச்சரிக்கின்றனர் பொலிஸார்

கொழும்பு, ஒக். 28

சமூக ஊடகங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட நடுத்தர வயது மற்றும் முதியவர்களுடன் போலியான காதல் உறவுகளை உருவாக்கி, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பணமோசடியில் ஈடுபடுகின்றனர். எனவே, இது விடயத்தில் பொது மக்கள் செயல்பட வேண்டும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் குழுக்களாக தங்கியிருந்து இணையவழி ஊடாக பொதுமக்களிடம் பணத்தை கொள்ளையடித்த வெளிநாட்டு பிரஜைகளும் இலங்கையர்களும் அண்மைக்காலமாக கைது செய்யப்படுகின்றனர்.

குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இணைய வங்கிப் பரிவர்த்தனைகளில் வழங்கப்படும் ஓ. ரி. பி. அல்லது ஒரு முறை கடவுச்சொற்கள் மற்றும் பல முக்கிய உத்திகள் மூலம் நிதி மோசடி செய்யப்படுகிறது.

இவற்றில் ஒரு முறையாக பேஸ்புக், தொலைபேசி அழைப்புகள் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட பல்வேறு நபர்களை வற்புறுத்தி பணத்தை முதலீடு செய்ய வைப்பதன் ஊடாக இந்த மோசடிகள் நடக்கின்றன.

இவை தவிர இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினர் சமூக ஊடகங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட நடுத்தர வயது மற்றும் முதியவர்களுடன் போலியான காதல் உறவுகளை உருவாக்கி, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பண மோசடியில் ஈடுபடுகின்றனர்.

மேலும் சமூகத்தில் பிரபலமானவர்கள் போல் நடித்து பல்வேறு திட்டங்களுக்கு அழைப்பு விடுத்து பணம் பெறும் செயல்பாடுகளும் இந்த நாட்களில் பதிவாகி வருகின்றன. எனவே, இது விடயத்தில் பொது மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் - என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# பிரிக்ஸ் அமைப்பில் இலங்கையை இணைப்பதற்கு சாதகமான பதில்!

## முழுமையான அறிவிப்பு விரைவில்

கொழும்பு, ஒக். 28

பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சாதகமான பதல்களை உறுப்பு நாடுகள் வழங்கியுள்ளன. இதன் முன்னேற்றங்கள் குறித்து முழுமையான அறிவிப்பை வெளிவிவகார செயலாளர் ஹரிணி விஜயவர்த்தன நாட்டுக்கு வழங்குவார் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் அமைப்பில் சீனாவுடனான இந்தியாவின் ஈடுபாடு இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. இந்நிலையில், பிரிக்ஸ் அமைப்பில் இலங்கையை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் வலுவாக உள்ளன. தெற்காசியாவை அணுகும் அமெரிக்காவின் முக்கிய பங்காளியாக டில்லி இப்போது உள்ளது.

மறுபுறம் பிரிக்ஸ் உறுப்பினராக இந்தியா உள்ளதுடன், சீனா மற்றும் ரஷ்யாவுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளை பேணுகிறது. உலகளாவிய கிழக்கில் நிகழ்ந்து வரும் பொருளாதார மாற்றத்தை இந்தியா அவதானித்து, அதைச் சாதகமாக்க முயல்கிறது. இந்த நிலைப்பாடு இலங்கைக்கும் பயனளிப்பதாக அமையும் என்பது பொருளாதார நிபுணர்களின் எதிர்வுக்கூறலாகும்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரிக்ஸ் உறுப்புரிமையில் இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதேவேளை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரிக்ஸ் நாடுகளின் ஆதரவை கோரியுள்ளார். ஆனால், பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான இந்த முடிவு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் மாத்திரம் எடுக்கப்படவில்லை. முந்தைய அமைச்சரவை இந்த முடிவை அங்கீகரித்திருந்தது.

அனைத்து இராஜதந்திர தளங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்த பின்னர், இந்தியாவின் உத்தியோகபூர்வ ஒப்புதலுடன் இலங்கை பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது. பிரிக்ஸ் அமைப்பில் இணையும்போது, எந்தவொரு மோதலையும் வளர்க்கும் எண்ணம் இலங்கைக்கு இல்லை என்பதை மேற்கு நாடுகளுக்கு உணர்த்துகிறது. மேலும் இலங்கையின் நீண்டகால அணிசேராக் கொள்கையினை உறுதியாக நிலைநிறுத்தவும் முடிகிறது.

எவ்வாறாயினும் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகள் சமீபத்தில் பிரிக்ஸ் அமைப்பில் இணைந்துள்ளன. இலங்கை, இந்தோனேசியா மற்றும் ஆர்ஜென்ரீனா உட்பட 30இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த அமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அறுகம்குடா தாக்குதல் திட்டம் பின்னணியில் வெளிநாடாம்!

## சண்டே ரைம்ஸ் தகவல்

கொழும்பு, ஒக். 28

வெளிநாடொன்றின் ஆதரவுடனேயே அறுகம் குடாவில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாக தெரிவித்துள்ள "சண்டே ரைம்ஸ்" ஒக்ரோபர் 19 முதல் 24ஆம் திகதிக்குள் இந்தத் தாக்குதலை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த செய்தியில், இஸ்ரேலிய சுற்றுலா பயணிகள் அறுகம் குடாவில் உள்ள அவர்களின் வழிபாட்டு தலத்தில் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டிருக்கக்கூடிய பெரும் ஆபத்தை பொலிஸார் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

ஒக்ரோபர் 19 முதல் 24ஆம் திகதி இந்த தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்தனர். இந்த வாரத்தில் இஸ்ரேலியர்கள் பெருமளவில் கலந்துகொள்ளும் நிகழ்வு நடைபெறவிருந்தது என புலனாய்வு தகவல்கள் தெரிவித்தன.

வெளிநாடொன்று இந்தத் தாக்குதலை மேற்கொள்வதற்கு எவ்வளவு தூரம் ஆதரவு வழங்கியது எவ்வளவு நிதி வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்ற என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொள்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டனவா என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் கூறப்பட்டது.

காசாவிலும் லெபனானிலும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதே அறுகம் குடா தாக்குதல் திட்டத்தின் நோக்கம். அத்துடன், அறுகம் குடா அருகே பொத்துவில் நகரத்தில் அதிக எண்ணிக்கையான முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர். இந்தத் தாக்குதல் நடந்திருந்தால் அவர்கள்மீதே பழி விழுந்திருக்கும். இதனால், உண்மையான குற்றவாளிகள் மீது கவனம் திரும்பியிருக்காது - சிறிது காலத்துக்காகவாவது.

இந்த தாக்குதல் சதித்திட்டம் தொடர்பில் கொழும்பு புறநகரை சேர்ந்த ஒருவரும் வடக்கை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டனர். மாலை தீவு - இலங்கை பெற்றோருக்கு பிறந்த ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளனர். அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வாக்காளர் அட்டை விநியோகம் நேற்று முதல் ஆரம்பமாகின!

கொழும்பு, ஒக். 28

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோக பணிகள் நேற்று முதல் ஆரம்பமாகின என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. அத்துடன், எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி, வாக்காளர் அட்டை விநியோகத்துக்கான விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்காவிடின், அருகிலுள்ள அஞ்சல் நிலையத்துக்குச் சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

# 10 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது!

கொழும்பு, ஒக். 28

சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளுடன் மலேசியாவிலிருந்து வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், அவரை அழைத்துச் செல்ல வந்திருந்த பெண் ஒருவரும் ஆண் ஒருவருமாக இருவர் அவருக்கு ஆதரவளித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸின் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைதாகினர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பதற்கு முன்னரே மக்கள் சிந்திக்கவேண்டும்!

## திருமலை வேட்பாளர் யதீந்திரா

மூதூர், ஒக். 28

**வாக்களிப்பதற்கு முன்னர் அதிகம் யோசித்தால் பின்னர் அரசியல்வாதிகளை அதிகம் குற்றஞ்சாட்ட வேண்டிய தேவை ஏற்படாது - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் ஆ. யதீந்திரா தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை மூதூரில், தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க முன்னர் சம்பூர் காளிகோவிலில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இந்தக் கட்சி என்ன செய்தது, கடந்தகாலத்தில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள்? தேர்தல் பிரசாரங்களின்போது இவ்வாறான கேள்விகளை பரவலாக எதிர்கொள்ள முடிகின்றது. மக்களின் கேள்விகளில் நியாயமுண்டு. அது சரியானதும்கூட. ஆனால், இந்த விடயத்தில் மக்களுக்கும் பொறுப்புண்டு. ஏனெனில், இன்று எவர்கள் மீதெல்லாம் குற்றஞ்சாட்டப்படுகின்றதோ, கேள்விகள் எழுப்பப்படுகின்றனவோ அவர்களை பாராளுமன்றம் அனுப்பியதும் மக்கள்தான். எனவே, இந்த விடயத்தில் மக்களுக்கும் பொறுப்புண்டு. மக்கள் தங்களுக்கான பிரதிநிதியை தெரிவு செய்கின்றபோது சரியானவர்களை தெரிவு செய்கின்றோமா, இவர் எங்களை பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியுள்ளவரா என்பதை ஆராய்ந்தே முடிவுகளை எடுக்க வேண்டும்.

எங்கள் மத்தியில் முதன்மை வேட்பாளர் என்று எவரும் இல்லை. வேட்பாளர் பட்டியலில் அப்படியொரு வகைப்படுத்தல் இல்லை. நாம் அனைவரும் சமன். ஒவ்வொரு வேட்பாளருக்கும் தங்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்கும் உரிமையுண்டு. ஆனால், அவர்களுக்கு வாக்களிப்பதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. சொந்தம், ஊர், நம்மட ஆள் என்பதை கடந்து, வேட்பாளர்களின் அரசியல் படிப்பு, அரசியல் அளுமை, சர்வதேச அரசியல் பற்றிய புலமை மற்றும் அவர்களின் கடந்தகால அரசியல் செயல்பாடுகள் என்பவற்றை ஆராய்ந்தே மக்கள் முடிவுகளை எடுக்க வேண்டும். வாக்களிக்க முன் அதிகம் யோசித்து வாக்களித்தால் - வாக்களித்த பின்னர் அதிகம் குற்றம்சாட்ட வேண்டிய தேவை ஏற்படாது. (ஐ)

# இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டு இல்லாத ஒரே கட்சி தமிழ் அரசே!

## மட்டு. வேட்பாளர் சரவணபவன்



மட்டக்களப்பு, ஒக். 28

இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாத வன்முறைகள் அற்ற ஒரே கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்கே மட்டக்களப்பு மக்கள் வாக்களிக்க வேண்டும் - அந்தக் கட்சியின் வேட்பாளர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அவரின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பணம்கொடுத்து, மதுபான போத்தல்களை கொடுத்து மக்களை ஏமாற்றியவர்கள். இம்முறை தேர்தலில் போலி நோட்டுகளுடன் மக்களை ஏமாற்ற சென்ற போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் வன்முறைகளில் ஈடுபட்ட அதே கட்சியைச் சேர்ந்த நபர்கள் சந்திவெளியில் அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பணிமனைக்கு சென்று அங்கு உள்ளவர்களை தாக்க முற்பட்ட போது அவர்களை பொலிஸார் கைது செய்ள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் கிழக்கில்தான் உள்ளார் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் இம்முறை அவர்களுக்கு வாக்களித்தால் மட்டக்களப்பு மக்கள் ஒரு குற்றவாளிக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பினார்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும் - என்றார். (ஐ)

# கல்முனையை துண்டாட எமது கட்சி இடமளியாது

## தமிழ் அரசு வேட்பாளர் நிதான்சன்

கல்முனை, ஒக். 28

கல்முனையை துண்டாட நினைத்து தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்க முயற்சிக்கும் எந்தவோர் அரசியல் சக்திக்கும் எமது கட்சி தலைமையும் எமது கட்சி உறுப்பினர்களும் இடமளிக்கமாட்டார்கள் - இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் அ. நிதான்சன் தெரிவித்தார்.

அவர் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்தத் தேர்தலில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முன்வைத்து அரசியல் செய்பவர்களுக்கு எதிராகக் குரல்கொடுக்க வேண்டிய நோக்கம் எனக்கு இருக்கின்றது. காரணம், வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கின்றது. இதனை எந்தவொரு சக்தியாலும் முறியடிக்க முடியாது. இந்த வழக்கில் நாங்கள் வெற்றிபெறுவோம்.

ஆனால், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் என்பவரின் கூட்டமொன்றில் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்துக்கள் யாவும் ஆக்ரோஷமானவையாகவும் தமிழ் - முஸ்லிம் இனவாதத்தை தூண்டுவதாகவும் அமைந்துள்ளன - என்றும் கூறினார். (ஐ)

# பெண்கள் அரசியலில் பிரகாசிக்க மனநிலை மாற்றமே அவசியம்!

## சொல்கிறார் மிதிலைச்செல்வி

யாழ்ப்பாணம், ஒக். 28

வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே பெண்கள் அரசியலில் பிரகாசிக்க முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் மிதிலைச் செல்வி சிறீ பத்மநாதன் தெரிவித்தார்.

தந்தை செல்வா கலையரங்கில் நடந்த பொதுமக்கள் கேள்வி - பதில் நிகழ்வில் பங்கேற்று பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசியலில் ஆர்வமுள்ள பெண்களின் வகிபாவம் அரசியலில் குறைந்து கொண்டு செல்கின்றது. தமிழ் மக்கள் சார்ந்து எந்த ஒரு பெண் பிரதிநிதியும் கடந்த பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை.

அரசியல் கட்சிகளில் திறமையான பெண்களை வேட்பாளராக நிறுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைதான். நானும் தமிழ் அரசு கட்சியில் 10 வருடங்களாக பல்வேறு பதவி நிலைகளை வகித்தும் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் திட்டமிட்ட முறையில் மறுக்கப்பட்டது.

தற்போது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியில் பாராளுமன்ற தேர்தலில் நான் களமிறங்கியுள்ளேன். நாங்கள் வெற்றி பெற்றால் பாராளுமன்றம் செல்லலாமா என்று கேட்டேன் அவர் விருப்பு வாக்கு அதிகமாக பெற்று பாராளுமன்றம் செல்பவர்கள் செல்லலாம் எனக் கூறினார்.

ஏன் நான் இதை அவரிடம் கேட்டேன் என்றால் அநேகமான கட்சிகள் ஆண் வேட்பாளர்கள் பாராளுமன்றம் செல்வதற்காக பெண்களை வாக்கு சேகரிப்பவர்களாக பயன்படுத்துவார்கள். விருப்பு வாக்கில் முன்னிலை பெற்றாலும் இறுதி நேரத்தில் கட்சி இன்னொருவருடைய பெயரைக் கூறி இவரை பாராளுமன்றம் அனுப்புவோம் வழிவிடுங்கள் என கேட்பார்கள் - கேட்ட வரலாறுகளும் நடைபெற்றுள்ளன.

நாட்டின் சனத்தொகையில் ஆண்களை விட பெண்களே சதவீதத்தில் அதிகமாக உள்ள நிலையில் பெண்களே பெண்களுக்கு வாக்களிப்பதில்லை. ஆகவே, பெண் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றம் செல்ல வேண்டுமானால் வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும் - என்றார். (ஐ-05)

# எமது வளர்ச்சியை பொறுக்காதவர்கள் அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர்!

## சாடுகிறார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஒக். 28

தமிழ் மக்கள் கூட்டணி இந்த அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. மக்களின் அமோக ஆதரவு பெருகி வருகின்றது. எங்களின் எழுச்சியை பொறுக்க முடியாத தரப்பு எங்கள் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வருகிறார்கள் - என்று கூறியுள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் வி. மணிவண்ணன்.

தமிழ் மக்கள் கூட்டணியினர் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில்,



பாதிக்கப்பட்ட கட்சியினரை மருத்துவமனையில் பார்வையிட்ட பின்னரே அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் மணிவண்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பெண்கள், ஆண்களை ரௌடி கும்பல்கள் துரத்தி துரத்தி அடிப்பது என்பது இந்த சமுதாயத்தில் முன்னர் நடந்திருக்காத மிக மோசமான காட்டுமிராண்டிதனமாகும். இது ஒரு கேவலமான அரசியல் காழ்ப்புணர்ச்சி நடவடிக்கை.

கோப்பாய் பொலிஸார் இந்த தாக்குதலாளிகளை கைது செய்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# வாக்குகளை பெற சில வேட்பாளர்கள் மக்களுக்கு பணம் கொடுக்கின்றனர்!

## இம்ரான் மஹ்ரூப் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஒக். 28

பாராளுமன்றத் தேர்தலில் வெல்வதற்காக பல வேட்பாளர்கள் வாக்காளர்களுக்கு பணத்தை கொடுத்து வாக்கை பெற முயல்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் இம்ரான் மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தோப்பூரில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர் ஊடகங்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்கள் தற்போது அரசியல்மீதும், அரசியல்வாதிகள் மீதும் வெறுப்புற்ற நிலையில் காணப்படுகின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் 36 இலட்சம் வாக்குகள் அளிக்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இந்தப் பொதுத் தேர்தலில் பல வேட்பாளர்கள் பணத்தை அள்ளி இறைக்கிறார்கள். ஊருக்குள் வரமுடியாத அரசியல்வாதிகள் பணத்தையும், பொருளையும் கொடுத்து வாக்கை பெறுவதற்கு முனைகிறார்கள். இருப்பினும், மக்கள் தெளிவுபெற்று நல்ல தலைமைகளை உருவாக்க வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை தேர்தல் அடுத்த வருடம் நடக்கும்!

## ஜனாதிபதி அநுரகுமார வாக்குறுதி

கொழும்பு, ஒக். 28

**மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரி - கஹவத்தையில் நடந்த பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலையும் நடத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம். உள்ளூராட்சி மன்றத்திலிருந்து அமைச்சரவை வரை முழு அரச கட்டமைப்பும் பலப்படுத்தப்பட வேண்டும். அதனூடாகவே, நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை மேலும் அதிகரிக்கும் வகையில் எதிர்கால செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்பதை உறுதியளிக்கிறேன்.

அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பலமான பாராளுமன்ற அதிகாரமும் அவசியமாகும். கடந்த காலங்களில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த ஆத்திரத்துடன் இருந்தனர்.

குறித்த உறுப்பினர்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக மக்கள் மத்தியில் அவ்வாறான கோபம் இருந்தது. எனவே, இருந்ததை விட மோசமான பாராளுமன்றத்தையா அல்லது சிறந்த பாராளுமன்றத்தையா உருவாக்க வேண்டும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.



எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் 25 பேருக்குக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை ஸ்தாபிக்கப்படும். எனவே, ஊழலற்றவர்களை கொண்டு பலமிக்கதொரு பாராளுமன்றத்தை உருவாக்குவதற்கு மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்!

## சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஒக். 28

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மஹரகம நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், தேங்காய் வாங்குவதற்குகூட மக்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாத்துறைக்கு ஆபத்து நேர்ந்துள்ளது. சுற்றுலா நமக்கு அந்நியச் செலாவணியைத் தரும் ஒன்றாக காணப்படுவதால் அது பாதிக்கக்கூடாது என்று பிரார்த்திக்கிறேன்.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பலமாக விளங்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கும்கூட இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஜனாதிபதி தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதி வரிச்சுமையை குறைப்பதாக உறுதியளித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிய போதிலும், அரசாங்கத்தால் வரிச்சுமையை குறைக்கவும், வரிச் சூத்திரத்தை மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு இல்லாமல் வரிச் சூத்திரத்தை மாற்ற முடியாது - என்றார். (அ)

# வென்றாலும் சலுகை இல்லை என்பதாலேயே பலர் விலகல்!

## சொல்கிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 28

தேர்தலில் வெற்றிபெற்றாலும் சலுகைகள் எதுவும் கிடைக்காது என்பதனாலேயே பலர் இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் விலகியுள்ளனர். அரசியலில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய ஆணையின் விளைவாக, எதிர்வரும் பொதுத்தேர்தலின் முடிவும் தெளிவாகியுள்ளது. இந்த அரசியல்வாதிகள், தாங்கள் மக்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்டதை முன்கூட்டியே உணர்ந்து தேர்தலில் போட்டியிடுவதில்லையென முடிவு செய்துள்ளனர்.

வாகன அனுமதிப்பத்திரம், பாதுகாப்பு பணியாளர்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள் போன்றவற்றைப் பெறமாட்டார்கள் என்பதும், ஊழலில் ஈடுபடும் நிலையில் இருக்க மாட்டார்கள் என்பதும் அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது. எதிர்க்கட்சியில் இருந்தாலும், தங்களால் பழைய ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இதனால்தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசியலில் இருந்து விலகி தேர்தலில் போட்டியிடுவதை தவிர்க்க முடிவு செய்திருந்தனர் - என்று அவர் கூறினார். (ஐ)

# தாம் விரும்பிய வேட்பாளருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 28

தேசிய மக்கள் சக்திக்குள் விருப்பு வாக்கு தொடர்பான போட்டி இல்லாத போதிலும் மக்கள் தாம் விரும்பிய வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கொத்தட்டுவை பிரதேசத்தில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறனார்.

மேலும், பாராளுமன்றத்தின் அருமை புரியாதவர்களே கடந்த காலங்களில் அதனை குறைத்து மதிப்பிட்டுவந்தனர், பாராளுமன்றத்துக்கு எவரும் பலவந்தமாகச் செல்லவில்லை. பாராளுமன்றத்துக்குச் செல்லும் ஊழல்வாதிகளை மக்களே புள்ளடியிட்டு அனுப்புகின்றனர்.

நாம் விருப்பு வாக்கு முறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என எமது எதிர்த்தரப்பினர் கூறி வருகின்றனர், எமது கட்சி வேட்பாளர்களிடையே, போட்டித்தன்மை இல்லாததால், நாம் அதற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

எனினும், விருப்பு வாக்கு அடிப்படையில் மக்கள் தாங்கள் விரும்பும் கட்சியையும் விரும்பும் வேட்பாளரையும் தெரிவுசெய்ய வேண்டும் - என்றார்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியில் இன்று அதிகளவான பெண்கள் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது நாட்டை சுத்தப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, ஊழலைத் துடைத்தெறிந்து சுத்தப்படுத்துவதற்குப் பெண்களின் வகிபாகமும் மிகவும் அவசியமானது - என்றும் அவர் கூறினார். (ஐ)



# மலையக மக்களின் எம். பிக்களை குறைப்பதற்கு சதித் திட்டங்கள்!

## இராதகிருஷ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 28

மலையக மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு திட்டமிட்ட வகையில் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை மக்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

இலங்கையில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களை தவிர்ந்த மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரமே 5 முதல் 6 சிறுபான்மை உறுப்பினர்கள் தெரிவு செய்ய வாய்ப்பு



இருக்கின்றது. கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற பகுதிகளில் மலையக தமிழர்கள் வாழ்ந்து வந்தாலும் அங்கே எமக்கான பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதில் போட்டி நிலவி வருகின்றது. அதனை சாத்தியப்படுத்துவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி வியூகம் வகுத்து இந்த தேர்தலில் செயற்பட்டு வருகின்றது.

ஆனால், நுவரெலியா மாவட்டத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு பல்வேறு சதி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பல கோடிகளை இந்த தேர்தலுக்காக கொட்டிக்கொடுத்து எங்களுடைய சிறுபான்மை மக்களை விலைக்கு வாங்கி சுயேச்சையாகவும் பல சின்னங்களிலும் போட்டியிட வைத்து சிறுபான்மை வாக்குகளை சிதறடிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு எங்களுடைய சமூகத்தில் கல்வி கற்ற சிலரும் துணைபோவது வேதனையளிக்கின்றது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாட்டின் பாதுகாப்புக்கு மீண்டும் ஆபத்துக்கள்!


## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் மீண்டும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டின் இராணுவ அதிகாரிகள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் மற்றும் அமைப்புகள் நாட்டின் முப்படைகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்பை பலப்படுத்தவும், நாட்டுக்கு வரும் பொதுமக்கள் மற்றும்



சுற்றுலா பயணிகளைப் பாதுகாக்கவும் வேண்டும்.

அனைத்து இனங்களின் கலாசாரத்துடன் செயல்படக்கூடிய ஒரே அரசியல் கட்சி பொதுஜன பெரமுன. நுவரெலியா மாவட்ட மரக்கறி விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் தலையிட வேண்டும்-என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு மிக முக்கியமானது வேடிக்கையாக கருதக்கூடாது

## சொல்கிறார் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, ஒக். 28

**நாட்டின் பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானது, அது நிச்சயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உண்மையிலேயே நாங்கள் இதை ஒரு வேடிக்கையான விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**



மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உங்களுக்குத் தெரியும் இந்த நாட்டிலே சுனாமி ஏற்படும் என தெரிவித்த போது நகைச்சுவையாக எடுத்தார்கள். ஆனால், சுனாமி அடித்தது, அதே போன்று குண்டுத் தாக்குதல் இடம்பெறப் போகின்றது என்று கூறிய போது பல சர்வதேச அமைப்புகளும் புலனாய்வு அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்தும் அதை சரியான முறையில் கருத்தில் கொள்ளாததால் 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று மிகப்பெரிய ஒரு தாக்குதல் இடம்பெற்று நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகினர்.

இன்றும் அந்த வேதனையோடு பலர் இருக்கின்றனர். ஆகவே, இவ்வாறான எச்சரிக்கைகள் வருகின்ற போது நாங்கள் அலட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது. நிச்சயமாக இந்த விடயத்திலே கூடிய கவனம் செலுத்த வேண்டும். நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் மிகக் கவனமாக பாதுகாப்பு பிரிவுகள் செயல்பட வேண்டும்.

அதேபோன்று மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். தவறான விடயங்கள் மூலம் நாட்டுக்கு ஓர் ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதற்காக இதை எச்சரிக்கையாக நாம் கருத வேண்டும்.

இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பது சாதாரண நபர்கள் அல்லர். ஒரு முக புத்தகத்தில் எழுதுபவர் அல்ல, வெளிநாட்டு தூதரக காரியாலயங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் இது சம்பந்தமாக கூறியிருக்கின்றன,

என்னை பலர் சமூக ஊடகங்களில் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல கோடிகளை நாம் பெற்றதாக கூறுகின்றார்கள். ஆனால், உண்மையிலேயே நாங்கள் இந்த முறை நிராகரிக்கப்படாமல் இருந்திருந்தால் நிச்சயமாக ஆயிரம் வீதம் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை, விசமிகள் சிலரே எம்மை தற்போது இவ்வாறு தூற்றிக் கொண்டு திரிகின்றார்கள்"- என்றார். (எ)

# பாடசாலை மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

கல்முனை, ஒக். 28


கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் தரம் 09 மாணவிகளுக்கு பேண்தகு நில முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சுற்றுலா மற்றும் நில அமைச்சால் (நில பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தால்) விவசாயத் துறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் முதல்வர் ஏ. பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் நவீனமயப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக கல்முனை பிரதேச செயலகத்தின் காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் ஐ. எம். ஜவ்ஹர், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் காணி பயன்பாட்டு உத்தியோகத்தர் எஸ். எச். சன்ஜிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவசாய பாட ஆசிரியர்களான எப். றிஸ்னி முபிஸால், ஏ. எம். அஜ்மீர், டி. கோகுல வாசன் மற்றும் மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)






# புலன அணியினரின் ஒன்று கூடல்

திருகோணமலை, ஒக். 28

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் 91/ 92 ஆண்டு புலன அணியினரின் எட்டாவது ஒன்று கூடலும் அணி உறுப்பினர் திருமதி டில்பிரபா அருள்பிரகாசத்தின் மணி விழாக் கொண்டாட்டமும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா தலைமையில் திருகோணமலையில் நடைபெற்றது. (எ)

# கார்மேல் பற்றிமாவில் களைகட்டிய வாணி விழா





கல்முனை, ஒக். 28

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி வாணி விழா சிறப்பாக நடைபெற்றது.

இதில் ஆன்மீக விருந்தினராக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரம பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் அபிவிருத்தி வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி தர்ஷினி பிரசாந் கலந்து சிறப்பித்தார். (எ)

# அருணலு கடன் தொடர்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை



சாய்ந்தமருது, ஒக். 28

சமுர்த்தி வங்கியால் சமுர்த்தி அடிப்படை அமைப்புகளுக்கு வழங்கப்படும் அருணலு கடன் தொடர்பில் அந்த அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் கணக்கீட்டுச் செயல்பாடுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுக்கு ஒருநாள் பயிற்சி பட்டறை சாய்ந்தமருது கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ. சீ. ஏ. நஜீம் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ரியாத் ஏ. மஜீத் தலைமையில் இந்த பயிற்சி பட்டறை நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ. சீ. ஏ. நஜீம், சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் எம். ஐ. அன்ஸார், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ. எல். எஸ். ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா உள்ளிட்டோர் கலந்து கொண்டு அருணலு கடன் தொடர்பில் விளக்கமளித்தனர்.

இதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அடிப்படை அமைப்புகளின் பொருளாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பயிற்சி பட்டறைக்கான வழிகாட்டலை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் வழங்கியது. (எ)



# நிழல்பட பிரதி இயந்திரம் கையளிப்பு

கல்முனை, ஒக். 28

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் 2026 உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவிகளின் பெற்றோர்களிடம் அதிபர் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் நிழல்பட பிரதி இயந்திரம் ஒன்று பெற்றோர்களால் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் விமானங்கள் ஈரானில் குண்டு மழை

## இராணுவ தளங்கள் தரைமட்டம்

டெல் அவிவ், ஒக். 28

**ஈரானின் ஏவுகணை, ட்ரோன் உற்பத்தி ஆலைகள், ஆயுதக் கிடங்குகளை இலக்கு வைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் கூட்டமாக சென்று குண்டு மழை பொழிந்தன.**

இதில் ஈரான் இராணுவத் தளங்கள் தரைமட்டமாகின.

கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் இராணுவம் 200 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இந்தச் சூழலில், ஈரானின் பல்வேறு பகுதிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் விமானப்படையின் 100 போர் விமானங்கள் ஆக்ரோஷமான தாக்குதல் நடத்தின. முதலில், ஈரான் எல்லைப் பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த ரேடார் சாதனங்களை இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசி அழித்தன.

ஈரானின் நட்பு நாடான சிரியாவின் ரேடார் அமைப்புகளும் குண்டுவீசி அழிக்கப்பட்டன. 2ஆவது கட்டமாக, இஸ்ரேல் போர் விமானங்கள் கூட்டமாக சென்று ஈரானின் ஏவுகணை, ட்ரோன் உற்பத்தி ஆலைகள், ஆயுதக் கிடங்குகள் மீது குண்டு மழை பொழிந்தன.

3ஆவது கட்டமாக, ஈரானின் 20 இராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் ஆக்ரோஷ தாக்குதல் நடத்தின. இதில் ஈரான் இராணுவத் தளங்கள் தரைமட்டமாகின. சுமார் 3 மணி நேரம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. (எ)

# அமைதியை பேணுமாறு இந்தியா வலியுறுத்தல்!

புதுடில்லி, ஒக். 28


இஸ்ரேல் - ஈரான் மோதலால் போர் பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், அனைத்து தரப்பினரும் பொறுமை காக்க வேண்டும். அமைதியைப் பேண வேண்டும் என்று இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் மத்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

மேற்கு ஆசியாவில் பதற்றம் அதிகரிப்பது கவலையளிக்கிறது. இதனால், மேற்கு ஆசியாவில் மட்டுமின்றி, அதையும் தாண்டி பாதிப்புகள் ஏற்படும். நாடுகள் இடையே பதற்றம் அதிகரிப்பதால் யாருக்கும் எந்த பலனும் கிடையாது. அப்பாவி மக்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள். எனவே, அமைதி பேச்சுக்கு திரும்ப வேண்டும். பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், மேற்கு ஆசியாவில் வாழும் இந்தியர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம்- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஈரான் மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலுக்கு சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், எகிப்து, பாகிஸ்தான், துருக்கி உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. 'ஈரான் மீதான தாக்குதலில் எங்களுக்கு தொடர்பு இல்லை' என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. போர் பதற்றத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபடக் கூடாது என அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் அறிவுறுத்தியுள்ளன. (எ)

# பங்களாதேஷில் தொடரும் தாக்குதல் பாதுகாப்பு கோரி இந்துக்கள் பேரணி




டாக்கா, ஒக். 28

பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி இந்துக்கள் நடத்திய பிரம்மாண்ட பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா அரசுக்கு எதிராக மாணவர்கள் முன்னெடுத்த போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது. இதையடுத்து ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜிநாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதையடுத்து, அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. எனினும், அங்குள்ள இந்துக்களின் வீடுகள், கடைகள், கோவில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. துர்க்கா பூஜையின்போதும் இந்தத் தாக்குதல் தொடர்ந்தது.

இந்த நிலையில், சனாதன் ஜக்ரன் மஞ்ச் சார்பில் சிட்டகாங் நகரில் உள்ள லால்டிகி மைதானத்தில் மாபெரும் பேரணி நடைபெற்றது. சிறுபான்மையினருக்கு உரிமையை நிலைநாட்ட வலியுறுத்தியும் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் நடைபெற்ற இந்தப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் பங்கேற்றனர். (எ)

# இஸ்ரேல் மீதான தாக்குதலை ஈரான் நிறுத்த வேண்டும்

## அமெரிக்க பாதுகாப்பு சபை

வாஷிங்டன், ஒக். 28

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை தற்காப்பு நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, வன்முறையின் சுழற்சியை உடைப்பதற்காக இஸ்ரேல் மீதான தாக்குதலை ஈரான் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு சபையின் செய்தித் தொடர்பாளர் சீன் சாவெட் கூறுகையில்,

"இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்துமாறு ஈரானை நாங்கள் வலியுறுத்துகிறோம். இதன்மூலம் இந்த வன்முறையின் சுழற்சி மேலும் தொடராமல் முடிவுக்கு வரும்.

இஸ்ரேலின் அதிக மக்கள் தொகை கொண்ட நகரத்தின் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு எதிராக தற்காப்புக்காக இஸ்ரேல் பதிலடி தாக்குதல் நடத்துகிறது. மேலும், மக்கள் வசிக்கும் இடங்களைத் தவிர்த்து, இராணுவ இலக்குகளையே இஸ்ரேல் குறிவைக்கிறது. இந்தத் தாக்குதல்களில் அமெரிக்கா பங்கேற்கவில்லை. தூதரக ரீதியிலான பேச்சுகளை விரைவுபடுத்துவதும், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதுமே எங்களின் நோக்கம்"- என்றார். (எ)

# சட்டவிரோதமாக நுழைந்த இந்தியர்கள் வெளியேற்றம்

புதுடில்லி, ஒக். 28

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அந்நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கல்வி, வேலைவாய்ப்புகளுக்காக அமெரிக்கா செல்ல வேண்டும் என்று உலகளவில் ஏராளமானோர் ஆர்வமாக உள்ளனர். அதேநேரத்தில் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய தொடர்ந்து முயற்சி செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக கொலம்பியா, ஈக்குவடோர், பெரு, எகிப்து, செனகல், உஸ்பெகிஸ்தான், சீனா, இந்தியா உட்பட பல நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய பலர் முயற்சிக்கின்றனர். அவர்களை தடுத்து நிறுத்த அமெரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (எ)

# ஈரான் மீதான தாக்குதலை முடித்துவிட்டதாம் இஸ்ரேல்

டெல் அவிவ், ஒக். 28

ஈரான் மீது துல்லிய தாக்குதல்களை தொடங்கிய இஸ்ரேல் இராணுவம், சில மணி நேரங்களில் தாக்குதலை முடித்துவிட்டதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகாரி வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் தாக்குதல்களுக்கு இஸ்ரேலின் பதிலடியை



நாங்கள் முடித்துவிட்டோம் என்பதை இப்போது என்னால் உறுதிப்படுத்த முடியும். தாக்குதல்கள் ஈரானில் உள்ள இராணுவ இலக்குகள் மீது துல்லியமான தாக்குதல்களை நடத்தினோம். இதன் மூலம், இஸ்ரேல் அரசுக்கு இருந்த உடனடி அச்சுறுத்தல்களை முறியடித்தோம்.

ஈரான் மீண்டும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துமானால், இஸ்ரேல் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இஸ்ரேல் எடுக்கும்" என தெரிவித்தார். (எ)

# இஸ்ரேலுக்கு பதிலடி; தயாராகிறது ஈரான்



ஜெருசலேம், ஒக். 28

தங்கள் நாட்டின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் உயிரிழந்தனர் என்று ஈரான் தெரிவித்துள்ளது. இதே வேளை, எந்தவொரு தாக்குதலுக்கும் கடுமையான, சரிவிகித மற்றும் நன்கு கணிக்கப்பட்ட எதிர்வினை கட்டாயம் கொடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது. எங்கள் நாட்டு மக்களின் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலுக் கும் பதிலடி கொடுக்கும் உரிமை எங்களுக்கு உண்டு. இந்த நடவடிக் கைகளுக்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்ததாக உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அசத்தல் வெற்றி

## இந்திய அணிக்கு 2ஆவது படுதோல்வி தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து


புனே, ஒக். 28

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி படுதோல்வியை தழுவியது. இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 -0 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நியூசிலாந்து கிரிக்கெட் அணி விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி புனேவிலுள்ள மைதானத்தில் நடைபெற்றது. இதில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 259 ஓட்டங்களைச் சேர்த்து சகல விக்கெட்களையும் இழந்தது. இதையடுத்து விளையாடிய இந்திய அணி 156 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் முதல் இன்னிங்ஸ் முடிவில் இந்திய அணி, நியூசிலாந்தை விட 103 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது.

இதையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்தின் ரொம் லேதம் 86 ஓட்டங்களை குவித்து அணிக்கு பலம் சேர்த்தார். மற்றவர்கள் யாரும் பெரியளவில் சோபிக்கவில்லை. இதனால் 69. 4 ஓவர்கள் முடிவில் நியூசிலாந்து அனைத்து விக்கெட்களையும் இழந்து 255 ஓட்டங்களைச் சேர்த்தது. இந்திய அணி தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 4, ஜடேஜா 3, அஸ்வின் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

359 ஓட்டங்கள் வெற்றி இலக்கை துரத்திய இந்திய அணியின் ரோஹித் சர்மா 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஷுப்மன் கில் 23 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். ஒற்றை ஆளாக நின்று சிறப்பாக விளையாடி யஷஸ்வி ஜெய்ஸ்வால் 77 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். ஓட்டம் எதுவும் எடுக்காமல் ரிஷப் பண்ட் ஆட்டமிழந்தார். 17 ஓட்டங்களில் விராட் கோலி வெளியேறினார். 9 ஓட்டங்களில் சர்பராஸ் கான் ஆட்டமிழந்தார். வாஷிங்டன் சுந்தர் 21 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடித்தார். 40 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்த இந்திய அணி 178 ஓட்டங்களைச் சேர்த்தது.



அஸ்வின் - ஜடேஜா ஓரளவுக்கு போராட, மிட்செல் சாண்ட்னர் 18 ஓட்டங்களில் அஸ்வினை வெளியேற்றினார். அடுத்து வந்த ஆகாஷ் தீப் ஓர் ஓட்டத்திலும், போராடிய ஜடேஜா 42 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க 60. 2 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்த இந்திய அணி 245 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது. இதன் மூலம் 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் மிட்செல் சாண்ட்னர் 6 விக்கெட்களையும், அஜாஸ் படேல் 2 விக்கெட்களையும், க்ளன் பிலிப்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

2012இற்குப் பிறகு சொந்த மண்ணில் இந்தியா தொடர்ந்து 18 டெஸ்ட் தொடர்களில் வெற்றி பெற்று சாதனை படைத்தது. இந்தத் தொடர் வெற்றிகளை 2 - 0 என்ற கணக்கில் நியூசிலாந்து தடுத்து நிறுத்தியது. கடைசியாக சொந்த மண்ணில் கடந்த 2012ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியா தோற்றது. இதன் பின்னர் 12 ஆண்டுகள் சொந்த மண்ணில் தோல்வியே இல்லை என்ற நிலையில், தற்போது டெஸ்ட் தொடரை இந்தியா இழந்தது. (எ)




## ரேபிள் ரெனிஸ் சம்பியன்ஷிப் காலிறுதியில் மணிகா பத்ரா

பாரிஸ், ஒக். 28

பிரான்ஸ் - மான்ட்பெல்லியர் நகரில் உலக ரேபிள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகத் தரவரிசையில் 30ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் மணிகா பத்ரா, 14ஆம் நிலை வீராங்கனையான ருமேனியாவின் பெர்னாட் ஸோக்ஸூடன் மோதினார்.

29 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மணிகா பத்ரா 3 - 1 (11 - 9, 6 - 11, 13 - 11, 11 - 9) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். காலிறுதி சுற்றில் மணிகா பத்ரா, 21ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் கியான் தியானியுடன் மோதவுள்ளார். (எ)

## "இது எங்கள் கூட்டு தோல்வி"



புனே, ஒக். 28

"இது எங்களது கூட்டு தோல்வி. இந்த தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் என யாரையும் நான் குறை கூற விரும்பவில்லை"- இவ்வாறு இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்தார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான புனே டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தோல்வியை தழுவியது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 0 - 2 என்ற கணக்கில் இந்திய அணி இழந்தது.

இந்த நிலையில், தோல்விக்கு பிறகு ரோஹித் கூறுகையில், "இந்த முடிவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களை விட நியூசிலாந்து அணி சிறப்பாக விளையாடியது. இந்த ஆட்டத்தின் சில தருணங்களை நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள தவறினோம்.

சில சவால்களில் நாங்கள் தோல்வி கண்டோம். அதற்கான பெறுபேற்றை நாங்கள் பெற்றுள்ளோம். டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற ஓர் அணி 20 விக்கெட்களை எடுக்க வேண்டும். நியூஸிலாந்து அணி 100 இற்கும் அதிகமான ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இலக்கை விரட்டிய போது நிச்சயம் அதனை எட்ட முடியும் என்று தான் எண்ணினோம். ஆனால், அழுத்தம் காரணமாக அது நடைபெறவில்லை.

இது எங்களது கூட்டு தோல்வி. இந்த தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் என யாரையும் நான் குறை கூற விரும்பவில்லை"- என்றார். (எ)

## ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி பார்சிலோனா அபார வெற்றி




மட்ரிட், ஒக். 28

லா லிகா உதைபந்தாட்ட தொடரில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி பார்சிலோனா அணி அபார வெற்றி பெற்றது.

20 முன்னணி அணிகள் இடையிலான லா லிகா உதைபந்தாட்ட தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் அணி சம்பியன் பட்டத்தை வெல்லும்

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பலம் வாய்ந்த பார்சிலோனா - ரியல் மட்ரிட் அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் பார்சிலோனா அணி ஆதிக்கம் செலுத்தியது . இதனால் ஆட்ட நேர முடிவில் 4 - 0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது . பார்சிலோனா அணியில் ரொபெர்ட் லெவண்டஸ்கி 2 கோல்கள், லாமின் யமால், ரொபின்ஹா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (எ)

# மே. இ. தீவுகள் ஆறுதல் வெற்றி; தொடரை கைப்பற்றியது இலங்கை

கண்டி, ஒக். 28

இலங்கைக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது. இருப்பினும் ஒருநாள் போட்டி தொடரை 2 - 1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி- 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடரில் முதல் இரு ஆட்டங்களில் இலங்கை வெற்றி பெற்றது.

கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக இந்த ஆட்டம் 23 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 23 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 156 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை




தரப்பில் அதிகபட்சமாக பதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ் தலா 56 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்த நிலையில், மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு டி. எல். எஸ். விதிப்படி 23 ஓவர்களில் 195 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்கை நோக்கி விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 22 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 196 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக எவின் லீவிஸ் 102 ஓட்டங்கள் எடுத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவுடன்...

மாகாணத்தில் மக்கள் மத்தியில் பதிந்து கொண்டு வருகின்றபடியால் பல கட்சிகள் அவதூறுகளை பரப்பிக் கொண்டு வரு கின்றார்கள். சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, சிறீதரன் போன்றவர்கள் அநுரவை சந்தித்து வருகிறார்கள்.

அவர்கள் எவ்வளவு வங்குரோத்து அடைந்திருக்கிறார்கள் என்பதனை உணரமுடியும். அநுரவோடு படம் எடுத்த 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருப்பார்கள். அமைச்சரவை கொடுப்பதாயின் படம் எடுத்த அனைவருக்குமே கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## டக்ளஸ்...

ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் பங்கேற்ற அவர், இலங்கை கடற்பரப்பை சூழவும் சீனாவின் ஆதிக்கமும் வடக்கு கடற்பரப்பில் இந்தியாவின் ஆதிக்கமும் உள்ளன. சர்வதேசத்தின் பிடிக்குள் இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது. இந்திய மீனவர்களால் வடக்கு கடல் சீரழிந்து போகிறது என்று கூறினார்.

இதன்போது செய்தியாளர் ஒருவர் "கடந்த அரசின் அமைச்சர் டக்ளஸ் கடற்றொழிலாளரின் பிரச்னை பற்றி தற்போதைய ஜனாதிபதியோடு பேசவுள்ளார் என்று கூறியுள்ளார். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்...?", என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த வர்ணகுலசிங்கம், "அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தான் எங்களின் கடல் வளம் நாசமாகிப் போயுள்ளது. தடை செய்யப்பட்டிருந்த தொழில்களை ஆதரித்து இயங்கவிட்டவரும் டக்ளஸ்தான். எல்லாவற்றையும் அழித்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கியவரும் அவரே. ஜனாதிபதியுடன் அவர் என்ன பேசப் போகிறார்." - என்றார். (ஐ-2)

## நான்...

பார்க்கவேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று வவுனியா - காத்தார் சின்னக்குளம் பகுதியில் அவரின் கட்சி பணிமனையை திறந்து வைத்தார். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தேசிய நல்லிணக்கம் ஊடாகவே எமது மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடியும். புதிய பாராளுமன்றத்தில் கூடிய ஆசனங்களை பெறுவதன் மூலம் ஆட்சி அமைப்பவர்களுடன் நாங்களும் பங்குகொள்வதன் ஊடாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது அரசியல் இலக்கை அடைவதற்காக அத்திசையை நோக்கி பயணிக்கலாம் என்ற வகையில் 10 மாவட்டங்களில் இம்முறை போட்டியிடுகின்றோம்.

இதனூடாக நான்கு அல்லது ஐந்து ஆசனங்களை பெறுவது எமது இலக்காக உள்ளது. இதுவரை நான் எட்டு ஜனாதிபதிகளை சந்தித்துள்ளேன். ஆனால், இவர் என்னைவிட வயதில் இளைமையானவர். அவரின் அணுகுமுறையிலும் செயல்பாட்டிலும் நல்லதொரு மாற்றம் தெரிகிறது. எனினும், அதனைப் பொறுத்திருந்துதான் நாங்கள் பார்க்கவேண்டும்.

நாம் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமை பிரச்னையை பிரதானமாக முன் வைத்துள்ளோம். இந்தத் தேர்தலில் எமது கட்சி அதிக ஆசனங்களை பெறுவதற்கான வாழ்த்துகளையும் அவர் தெரிவித்திருந்தார். சிலவேளை இந்த சந்திப்பு பலருக்கு புளியை கரைத்திருக்கலாம்.

நாங்கள் இரு தரப்புமே ஆயுதப் போராட்டத்தின் பின்னர் பாராளுமன்றம் சென்றவர்கள். அந்தவகையில் ஒரு புரிந்துணர்வு இரு தரப்புக்கும் உள்ளது. அவர்களின் ஆட்சியில் கலந்துகொள்ள போகிறோமா என்ற விடயத்தைத் தேர்தலின் பின்னரே தீர்மானிக்க முடியும் - என்றார். (ஐ)

## இனப்...

கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்" - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வெளிநாட்டு தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஆளுமையுள்ளவர்கள் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு வர வேண்டும். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்களும் நிச்சயமாக பாராளுமன்றம் செல்வோம். நாங்கள் அனைவரும் கரம் கோத்துக்கொண்டு சிநேகபூர்வமான முறையில் அநுர அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம்." - என்றார். (ஐ)

## அறுகம்...

சென்றவர்கள் பொத்துவில் பொலிஸில் அளித்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அறுகம் குடாவில் 3 இடங்களில் வெடிகுண்டு அச்சுறுத்தல் உள்ளது என்றும் அங்கு செல்ல வேண்டாம் எனவும் சந்தேகநபர் சுற்றுலா வந்தவர்களிடத்தில் கூறியுள்ளார் என்று தெரிய வருகிறது.

இவ்வாறு கைதானவர் சாய்ந்தமருதை சேர்ந்த 28 வயது நபராவார்.

அறுகம் குடாவில் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளது என்றும் அங்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா, பிரிட்டன், நியூசிலாந்து, ரஷ்யா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பயண எச்சரிக்கை விடுத்திருந்தன. இந்த நிலையில் அறுகம் குடா தாக்குதல் சதித் திட்டம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அறிந்ததே. (ஐ)

## அநுர...

14ஆம் திகதி நடைபெறவுள்ள நிலை யில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக் கள் சக்தி அரசாங்கம் முழு அளவில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், தெற்கு பசுபிக் தீவு நாடான சமோவா வில் நடைபெற்ற பொதுநலவாய ஜனாதிபதிகளின் உச்சி மாநாட்டிலும் ரஷ்யாவில் இடம்பெற்ற பிரிக்ஸ் அமைப்பின் மாநாட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பங்கேற்க வில்லை. எனவே, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது அரச முறை முதல் வெளிநாட்டு பயணமாக இந் தியா செல்கிறார்.

இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தேசிய மக் கள் சக்தியின் பொருளாதார குழு பங்கேற்கவுள்ளது.

இலங்கை - இந்திய பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார உறவுகள் குறித்து பரந்துபட்ட பேச்சுகளில் இரு தரப்பும் ஈடுபட உள்ளன.

இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற இந்திய திட்டங்கள் குறித்து இலங்கை குழு அவதானம் செலுத்தவுள்ளது. குறிப்பாக ஜனாதிபதி அநுரவின் அரசாங்கத்தின் விமர்சனத்துக்கு உட்பட்டுள்ள அதானி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் குறித் தும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

எந்தவொரு விலைமனுக் கோரலுமின்றி இந்தியாவின் அதானி குழுமத்துக்கு மன்னார் காற்றாலை மின்சார திட்டம் வழங்கப்பட்டுள்ள தாக அரசாங்கம் சாடுகிறது. எனவே ஜனாதிபதியின் இந்திய பயணத்தில் இந்த விடயம் கருத்தில் கொள்ளப்படும் என்றும் தெரிகிறது. (ஐ)

## தமிழ்தேசிய...

மேலும், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாறவேண்டுமானால், தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும், அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டிய காலத்தேவை எழுந்துள்ளது.

உட்கட்சி முரண்நிலைகளைத் தாண்டி இது சாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும் இனத்தின் இருப்புக்காக அதனைச் சாத்தியமாக்க வேண்டிய காலக்கடமை எமக்கு தரப்பட்டுள்ளதை உணர்ந்து, கொள்கை ரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில் முறைமைப் படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத்தமிழர்களின் அரசியல்வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன் - என்றார். (ஐ)

## அநுரகுமாரவின்...

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் நேற்று நீர்கொழும்பில் நடந்த பரப்புரை கூட்டத்தில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தலில் தோல்வியடைந்தால் என்னை வீட்டிலிருக்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனக்கு பெரும்பான்மையானவர்கள் வாக்களிக்கவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் அவருக்கும் பெரும்பான்மை - 51 சதவீதம் வழங்கப்படவில்லை. அவருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நான் பெரும்பான்மை இல்லாத முன்னாள் ஜனாதிபதி. அநுரகுமார பெரும்பான்மை இல்லாத தற்போதைய ஜனாதிபதி.

நான் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கோருவதற்காக உங்கள் முன்னால் வந்துள்ளேன். நாடு வீழ்ச்சியடைந்தபோது பொறுப்பேற்க எவரும் இருக்கவில்லை. சஜித்தும் இல்லை - அநுரவும் இல்லை. பிரதமராவதற்கு எவரும் இருக்கவில்லை.

ஒருநாள் நிமால் லான்சா பிரதமராக தயாரா என்று என்னிடம் கேட்டார் நான் எப்படி என வினவினேன்.

அதற்கு அவர் அனைவரும் இதனை ஏற்றுக்கொள்வார்கள் - என்றார்.

அதன் பின்னர் நான் ஜனாதிபதியை சந்திக்கச் சென்று சவாலை ஏற்றுக் கொண்டேன்.

அந்த சமயம ஜனாதிபதி பதவியை துறந்தவேளை பாராளுமன்றம் சுற்றி வளைக்கப்பட்டவேளை எவரும் இருக்கவில்லை. தற்போது தலைமைத்துவத்தை கோரும் அனைவரும் தப்பியோடினார்கள்.

நாங்கள் இராணுவத்தை பயன்படுத்தி இந்த நாட்டை காப்பாற்றினோம்.

அநுரகுமார திஸநாயக்க மூன்று மாதங்களுக்கே பதவி வகிப்பார் என மக்கள் தெரிவிக்கின்றனர் - நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை. அவர் தனது பதவியைத் தொடரவேண்டும். அவரின் கட்சியிலிருந்து அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்படுமா தெரியாது. அவ்வாறான விடயங்களை செய்யக்கூடாது. ஆனால், அவர்களின் பட்டியலை பார்த்தால் இந்த அரசாங்கம் மூன்று மாதங்கள்கூட நீடிக்கும் என நான் நினைக்கவில்லை - மூன்று வாரங்கள் கூட நீடிக்காது.

ஆகவே, நாட்டுக்குத் தலைமை தாங்ககூடியவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும். ஆகவே, நாட்டுக்குத் தலைமை தாங்ககூடியவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

அனுபவசாலிகள் பாராளுமன்றத்தில் இருந்தால் ஜனாதிபதியால் மூன்று வருடங்கள் ஆட்சி செய்ய முடியும். அவ்வாறான சூழ்நிலை காணப்படாவிட்டால் நாட்டில் வரிசைகள் யுகம் உருவாகும். தற்போதைய தேங்காய் வரிசைகளுக்குப் பதில் புதிய வரிசைகள் உருவாகும் - என்றார். (ஐ)

## லண்டனிலிருந்து வந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களை சந்திப்பதற்காக லண்டனில் இருந்து வருகை தந்தவர் திடீரென நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்.

கணேசராசா தியாகராசா (வயது 56) என்பவரே நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த 16ஆம் திகதி கொழும்பில் இருந்து பேருந்தில் வந்தபோது மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். (ஐ-05)

## நாடு முழுவதும்...

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஷ் மார்ஷல் எச். எஸ். சம்பத் துய்யகொந்த தெரிவித்தவை வருமாறு,

நாட்டின் பிரதான சுற்றுலாத்தளங்களை மையப்படுத்தி தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன என்று எமது புலனாய்வு கட்டமைப்புக்களுக்கு ஒக்ரோபர் முதல் வாரத்திலேயே தகவல்கள் கிடைத்திருந்தன.

இதனையடுத்து தேசிய பாதுகாப்பு சபை உடனடியாகக் கூட்டப்பட்டு எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த விடயம் சம்பந்தமாக வெளிநாடுகள் தனது பிரஜைகளுக்கு முன்னெச்சரிக்கையை விடுத்திருந்தன. இதனையடுத்தே விடயம் பகிரங்கமானது.

ஆனால், அதற்கு முன்னதாகவே சுற்றுலாத்தளங்கள் உட்பட நாட்டின் பிரதான பகுதிகள் அனைத்துமே பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன.

தற்போது அந்த நிலைமை மேலும் தீவிரமாக்கப்பட்டு பாதுகாப்பு அதியுச்சமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் எந்தவொரு பிரஜைகளும் அச்சமடைய வேண்டியதில்லை. நாட்டில் அச்சுறுத்தல் நிலைமைகள் அனைத்தும் களையப்பட்டுள்ளன. சுற்றுலா பயணிகள் உட்பட நாட்டின் பிரஜைகள் அனைவரும் சுதந்திரமாக நடமாட முடியும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

பிறந்து வாழ்ந்தவர். ரணிலோ, சஜித்தோ, நாமலோ கிராமத்தில் படித்து வளர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் வரிசையில் நின்று அரச மருத்துவமனையில் மருந்து எடுத்திருப்பார்களா? இல்லை. ஏதாவது ஒரு விடயத்துக்கு வரிசையில் இருந்திருப்பார்களா? அவர்களுக்கு சாதாரண மக்களின் பிரச்னை தெரியாது. ஆகவே, எமது வர்க்கத்தை சேர்ந்தவர் தற்போது ஜனாதிபதியாகி இருக்கின்றார்.

இதிலிருக்கும் கணிசமானவர்கள் யுத்தத்தில் பாதிப்படைந்தவர்களாக இருக்கலாம். பெரும்பாலனவர்களின் வீடுகள் சேதமடைந்திருக்கலாம். இதேபோல் அநுர குமார திஸநாயக்கவின் வீடு 1979 ஆம் ஆண்டு இராணுவத்தால் தாக்கப்பட்டிருந்தது. யுத்தத்தால் உற்றார், உறவினர்கள் உயிரிழப்புக்களை சந்தித்திருக்கலாம் அதேபோல் அநுர அவர்களின் ஒரேயோர் அண்ணா ரயர் கொளுத்தி கொலை செய்யப்பட்டார்.

யுத்தம் மிகவும் வித்தியாசமானது. யுத்தத்தின் போது சாதாரண சிங்கள, தமிழ் மக்கள், இளைஞர்கள்தான் கொல்லப்பட்டார்கள். சிறப்பம்சம் என்னவென்றால் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புரிந்த ஒருவரே ஜனாதிபதி ஆகியிருக்கின்றார் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தென்கொரிய தொழில் வாய்ப்பை இழக்கும் அபாயத்தில் இலங்கை?

கொழும்பு, ஒக். 28

தென் கொரியாவால் வழங்கப்படவிருந்த 10 ஆயிரம் தொழில் வாய்ப்பை இலங்கை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளில் இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த உடன்படிக்கை தொடர்பில் புதிய அரசாங்கம் அக்கறை காட்டாத நிலையில், குறித்த 10 ஆயிரம் தொழில் வாய்ப்பை வேறு நாட்டுக்கு வழங்குவது தொடர்பில் தென்கொரிய அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்ற இந்த வேலை வாய்ப்பு ஒதுக்கீட்டை கம்போடியா பெற்றுக் கொள்ளும் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் பலி!

கொழும்பு, ஒக். 28

மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

வீட்டுக்குள் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் குளிர்சாதனப் பெட்டியின் கீழ் கை வைத்த நிலையிலேயே மின்சாரம் தாக்கியுள்ளது. மகன் மயங்கிய நிலையில் கிடப்பதை கண்ட தந்தை அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தார்.

சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கம்பஹா - வெயங்கொடை அலவல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

## வீசா இன்றி தங்கியிருந்த ரஷ்ய தம்பதியர் கைது!

கண்டி, ஒக். 28

வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த வெளிநாட்டு தம்பதியை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவு அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் 39, 32 வயதுடைய ரஷ்ய நாட்டைச் சேர்ந்த தம்பதியர் ஆவர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கண்டி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## கட்டளையை மீறிச் சென்ற லொறி மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஒக். 28

உத்தரவை மீறிச் சென்ற லொறி ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை அம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லுனுகம்வெஹரவில் இருந்து சூரியவெவ நோக்கி லொறியை சோதனைக்காக நிறுத்துமாறு பொலிஸார் உத்தரவிட்ட போதும் அதனை பொருட்படுத்தாமல் லொறியை ஓட்டிச் சென்ற போதே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் ரயர் மீது துப்பாக்கி ரவை பாய்ந்ததையடுத்து லொறி நிறுத்தப்பட்டது. இந்த சம்பவத்தில் லொறி சாரதி கைது செய்யப்பட்டார்.

லொறியில் 17 மாடுகள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பெண்ணை சுட்டுக் கொல்ல ஒரு கோடி ரூபாய் ஒப்பந்தம்!

### சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, ஒக். 28

பெண் ஒருவரை சுட்டுக் கொல்லத் திட்டமிட்டார் என்று கூறப்படும் நபரை தாம் கைது செய்துள்ளனர் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பெண் ஒருவரை சுட்டுக் கொல்லுமாறும் அதற்காக ஒரு கோடி ரூபாயை தருவதாகவும் வர்த்தகர் ஒருவர் கைதான சந்தேகநபரை ஒப்பந்தம் செய்துள்ளார். அத்துடன், அந்த வர்த்தகர் சந்தேகநபருக்கு ரி - 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 6 தோட்டாக்களையும் வழங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

மேலும், பெண்ணை கொல்வதற்காக ஒப்பந்தத் தொகையிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை முற்பணமாக பெற்றதுடன், ஹெரோயின் போதைப் பொருளையும் சந்தேகநபர் பெற்றுள்ளார்.

அத்துடன், கொலை ஒப்பந்தத்தை செய்த வர்த்தகரிடம் பல துப்பாக்கிகள் உள்ளன என்று சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார். சந்தேகநபரை காலி நீதிமன்றில் முற்படுத்தவுள்ள பொலிஸார், குறிப்பிட்ட வர்த்தகரையும் கைது செய்ய நடவடிக்கைளை எடுத்துள்ளனர். (ஐ)

# வெளிநாட்டு உளவு சேவைகள் வழங்கும் தகவல்களை ஆராய்வதற்கு 3 குழுக்கள்!

கொழும்பு, ஒக். 28

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டு புலனாய்வுச் சேவைகள் வழங்கும் தகவல்களை 24 மணிநேரமும் கண்காணிப்பதற்காக, மூன்று தனித்தனி புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் புலனாய்வு அறிக்கைகளை ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உடனடியாக தகவல்களை அனுப்பி, அந்த அறிக்கையின்படி உரிய நடவடிக்கை எடுப்பதுவே இந்தக் குழுக்களின் பொறுப்பாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு புலனாய்வு பிரிவினர் வழங்கிய அறிக்கைகள் உரிய முறையில் ஆய்வு செய்யப்படவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த நிலைமையை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் தலைவர்கள் இந்த புதிய பொறிமுறைக்கான பணிப்புரைகளை வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

சுற்றுலா பகுதிகளில் இஸ்ரேலியர்களைத் தாக்கும் திட்டம் தொடர்பான தகவலை, இந்திய உளவுத்துறை சமீபத்தில் வெளியிட்டது. இந்த தகவல் வெளியானதையடுத்து, சுற்றுலா பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்க படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

தாக்குதல் திட்டம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் தொடர்புடைய ஏனையோரை கைது செய்ய புலனாய்வு பிரிவினரால் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்நாட்டின் சுற்றுலா பகுதிகளில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து நடத்த திட்டமிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கை தொடர்பான மேலதிக உண்மைகளை வெளிக்கொணர உளவுத்துறை அதிகாரிகள் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. (அ)

## ஆபிரிக்க பன்றி காய்ச்சல் பரவியிருப்பது உறுதியானது

கொழும்பு, ஒக். 28

ஆபிரிக்க பன்றி காய்ச்சல் நாட்டில் முதல் தடவையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களில் பன்றிகள் திடீரென இறக்கும் சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில் இது தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் விசாரணைகளை நடத்தியிருந்தது.

குறித்த பரிசோதனையின் படி, தெற்காசிய நாடுகளில் சமீபத்தில் பதிவான ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலுடன் மேற்படி பன்றிகள் தொடர்புபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இலங்கையில் இந்நோய் பதிவாகியிருப்பது இதுவே முதல் தடவையாகும். மேலும் இந்த அதிதீவிர நோய்க் கிருமி ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் தடுப்பதற்காக அந்தந்த பகுதிகளில் உள்ள கால்நடை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, பிரதேச செயலகங்களுக்கு இடையில் பன்றி இறைச்சி விநியோகத்திற்காக, பிரதேச சுகாதார அதிகாரிகளின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆற்றில் நீராடிய இளைஞர் மரணம்!

கொழும்பு, ஒக். 28

நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கம்பஹா - நிட்டம்புவ பகுதியில் அத்தனகலு ஆற்றில் நீராடியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அப்பத்தளை பிரதேசத்தை சேர்ந்த 20 வயது இளைஞராவார்.

உயிரிழந்தவர் நிட்டம்புவ பொலிஸ் பிரிவில் தற்காலிகமாக வசிப்பவர் எனவும் நண்பர்கள் சிலருடன் நீராடச் சென்ற போதே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நுளம்பு பெருகும் சூழலை பேணியவருக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஒக். 28

டெங்கு நுளம்புகள் பெருகும் விதத்தில் சூழலை வைத்திருந்தவருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப் படடது.

மட்டக்களப்பு - காத்தான்குடியின் பூநொச்சிமுனை டெங்கு களப் பரிசோதனை நேற்று நடைபெற்றது. இதன்போது, டெங்கு நுளம்புகள் பெருகும் விதத்தில் சூழலை வைத்திருந்த இடத்தின் உரிமையாளருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

காத்தான்குடி நிலைய மக்கள் தொடர்பாளர் பிரிவு பொறுப்பதிகாரி எம். ஐ. எம் ஜவாகிர் தலைமையிலான குழுவினர் இந்த களப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தனர். (ஐ)

## மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற தாய் தவறிவீழ்ந்து மரணம்!

கொழும்பு, ஒக். 28

மோட்டார் சைக்கிளில் மகனுடன் சென்ற தாயார் தவறுதலாக வீழ்ந்து உயிரிழந்தார். புத்தளம் - தேத்தாப்பலையில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விகாரைக்கு சென்று பூசை வழிபாடுகள் நிறைவடைந்த பின்னர் தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இடையில் தாயார் தவறி வீழ்ந்துள்ளார். சுமார் 70 மீற்றர் தூரம் சென்ற போதே தாயார் பின் இருக்கையில் இல்லை என்பதை உணர்ந்து அவரைத் தேடிச் சென்றுள் ளார்.

இந்த நிலையில், மோட்டார் சைக்கிளிலிருந்து காயங்களுக்கு உள்ளான தாயாரை அங்கிருந்தவர்களின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் தாயார் உயிரிழந்தார்.

49 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்ற மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## குடும்பம் ஒன்றின் செலவு 6,037 ரூபாயால் குறைந்தது

கொழும்பு, ஒக். 28

நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவு 6 ஆயிரத்து 37 ரூபாயால் குறைவடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உணவு வகைகளுக்கான மாதாந்த செலவும் 2 ஆயிரத்து 885 ரூபாயாலும் உணவு அல்லாத பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை குறைவால் 3 ஆயிரத்து 145 ரூபாய் மக்களுக்கு நன்மை கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.